செ.வெ.எண்: 408 நாள்: 04.07.2019

**கஜா புயலால் பாதிப்படைந்த மரங்களை துண்டுகளாக்கவும், துகளாக்கவும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

கஜா புயலால் பாதிப்படைந்த மரங்களை துண்டுகளாக்கவும், துகளாக்கவும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

கடந்த வருடம் ஏற்பட்ட கஜா புயலினால், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயப் பெருமக்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகினர். சுமார் அறுபது இலட்சம் மரங்கள் வேரோடு சாய்ந்தும், முறிந்தும் பாதிப்படைந்தன. கஜா புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், தங்களது நிலங்களில் முறிந்த, வேரோடு சாய்ந்த மரங்களை சிறுதுண்டுகளாக அறுத்து விரைவில் அப்புறப்படுத்துவதற்கு வசதியாக, தமிழ்நாடு அரசு கனரக வகை மரம் அறுக்கும் கருவிகளையும் (Heavy Duty Chain Saw) துகளாக்கும் கருவிகளையும் (Shredder Cum Pulverizer) வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வாங்க ஆணையிட்டு , அதன்படி, 150 கனரக வகை மரம் அறுக்கும் கருவிகளும், 4 துகளாக்கும் கருவிகளும் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு, இக்கருவிகளை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

பாதிக்கப்படட விவசாயிகள், குறைந்த செலவில் விழுந்த மரங்களை அகற்றி, மீண்டும் வேளாண் பணியினை தொடர வேண்டும் என்ற நோக்கத்தில், கனரக வகை மரம் அறுக்கும் கருவிக்கு ஒரு மணிக்கு ரூ. 85ம், டிராக்டருடன் பொருத்தப்பட்ட துகளாக்கும் கருவிக்கு மணிக்கு ரூ.340ம் குறைந்த வாடகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேரோடு சாய்ந்த, முறிந்த தென்னை மரங்களின் ஓலைகள் மற்றும் முறிந்த மரக்கிளைகளை துகளாக்கும் கருவியினைக் கொண்டு சிறுதுகளாக்கி, உரமாக பயன்படுத்திட இயலும். இத்துகள்களை விவசாய நிலங்களில் பயன்படுத்தினால் மண் வளம் அதிகரிக்கும்.

கஜா புயல் தாக்கிய இடங்களில் அகற்றப்படாமல் மரங்கள் ஏதும் இருப்பின் குறைந்த வாடகையில் தமிழ்நாடு அரசு வழங்கி வரும் கனரக வகை மரம் அறுக்கும் கருவிகளையும், துகளாக்கும் கருவிகளையும் விவசாயப் பெருமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு, வேளாண்மைப் பொறியியல் துறையின் உபகோட்டங்களான அறந்தாங்கி மற்றும் புதுக்கோட்டை அலுவலகங்களில் முன்பதிவு செய்து இவ்வியந்திரங்களை பயன்படுத்திக்கொள்ளலாம். இதுகுறித்து மேலும் விபரங்களுக்கு புதுக்கோட்டை வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் செல்வம் மற்றும் உதவிசெயற்பொறியாளர் புதுக்கோட்டை 94432 64168 என்ற கைபேசி எண்ணிலோ, அறந்தாங்கி உதவி செயற்பொறியாளர் 94421 78763 என்ற கைபேசி எண்ணிலோ தொடர்புகொண்டு பயன்பெறலாம்.

தமிழ்நாடு அரசு அளிக்கும் இவ்வசதியினை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு பாதிக்கப்பட்ட மரங்களை விரைவில் அகற்றி, அந்த இடங்களில் மீண்டும் சாகுபடிப் பணியினை தொடர வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**